1,

# வேட்டுவக்கவுண்டர் வரலாறு

From Watchman S. Subramanam Noyyal T.B. 26/10/65

முன் காலத்தில் திருப்பதிப்பக்கம் காலாவத்திரியென்ற
ஊரில் வேட்டுவக்கவுண்டர்கள் வசித்து வந்தார்கள்.
கொங்கு நாட்டில் கொடுமுடிப்பக்கம் இலப்பிரா
மணர்கள் என்று ஐயர்கள் வசித்து வந்தார்கள்
அப்போது கொடுமுடிப்பக்கம் திருடர்கள்
உபத்திரவம் அதிகமாக இருந்தது. பிராமணர்
கள் அவர்களுக்குப்பயந்து, திருடர்களை விரட்
டுவதற்க்காக காலாவத்திரியிலிருந்து
வேட்டுவக்கவுண்டர்களை அழைத்தார்கள், வேட்டு
வர்கள் அதற்கு இணங்கி புறப்படும்போது
அவர்கள் மனைவி மார்களிடம், எங்களுடன்
நம் நாய்களையும் கூட்டிச் செல்கிறோம் நாங்
கள் வருமுன் நாய்கள் இங்கு திரும்பி வந்தால்
நாங்கள் இறந்து விட்டதாக நினைத்துக்
கொள்ளுங்கள், என்று சொல்லி விட்டு
வேட்டுவக்கவுண்டர்கள் எல்லோரும் அவர்களு
டைய நாய்களையும் கூட்டிக் கொண்டு கொடு
முடிக்கி புறப்பட்டார்கள்.

வரும் வழியில் காவேரி ஆற்றில் தண்ணீர் அதிக
மாக இருந்தது. வேட்டுவக்கவுண்டர்கள் எல்
லோரும் தண்ணீரில் நீந்தி மறு கரை வந்து சேர்
ந்தார்கள், ஆனால் அவர்களுடைய நாய்கள்
தண்ணீரில் இறங்கப்பயந்து திரும்பி

அவர்கள் ஊருக்கே சென்றது. நாய்கள்
திரும்பி வந்ததைக் கண்ட வேட்டுவக்
கவுண்டர் மனைவிமார்கள், தங்களுடைய
புருஷன் மார்கள் இறந்து விட்டதாக
நினைத்து. அவர்கள் ஜாதி வழக்கப்படி
மாங்கல்யத்தை அறுத்து செய்ய வேண்
டிய கருமாதிகளை செய்து முடித்தார்கள்.
இங்கு இப்படி இருக்கும் போது. காவேரி
தாண்டிய வேட்டுவக் கவுண்டர்கள், கொடு
முடிப்பக்கம் வந்து பிராமணர்களுடன்
சேர்ந்து, திருடர்களை யெல்லாம் அழித்து
விரட்டினார்கள். அதற்கு பிராமணர்கள்
சந்தோஷமடைந்து வேட்டுவக் கவுண்டர்
களுக்கு. சிலபரிசுகள் கொடுத்தார்கள்,
வேட்டுவர்கள் அதை வாங்கிக் கொண்டு
திரும்பி தங்கள் ஊருக்குச் சென்றார்கள்
அங்கே அவர்களுடைய மனைவிமார்கள்
எல்லோரும் தாலியிழந்து விதவையாக
இருப்பதைப் பார்த்து. இனி நாம் மனைவி
மார்கள் முகத்தில் விழிக்கக் கூடாது
என்று திரும்பி மறுபடியும் கொடுமுடி வந்த

சிவப் பிராமணர்களை சந்தித்து நடந்த
விபரங்களைச் சொன்னார்கள்.
பிராமணர்கள் உடனே அவர்களுக்கு
வேண்டிய வசதிகள் செய்து கொடுத்
தார்கள். வேட்டுவக்கவுண்டர்கள் மறுபடி
வேறு கல்யாணம் செய்து கொண்டு
கொடுமுடிப்பக்கமே சுகமாக இரு
ந்தார்கள்.

சுபம்